මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு

පොදු කාර්යාලය : 011-2868441, 2868442, 2868443
பொது அலுவலகம்
ෆැක්ස්/தொலைநகல் : 011-2868426

web : www.elections.gov.lk e-mail : info@elections.gov.lk

මැතිවරණ කොමිෂන් සභා කාර්යාලය
සරණ මාවත, රාජගිරිය (10107)
தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்
சரண மாவத்தை, இராஜகிரிய (10107)

| | | |
|---|---|---|
| මගේ අංකය : EC/NE/ PE/09/2024<br>எனது இல. | ඔබේ අංකය :<br>உமது இல. | දිනය : 2024.09.27<br>திகதி |

சுற்றறிக்கை இல. PE/2024/07

**மிக அவசரமானதும் முக்கியமானதும்**

அனைத்து அமைச்சுச் செயலாளர்கள் ∴ மாகாண சபை தலைமைச் செயலாளர்கள், மாகாண சபை அமைச்சுச் செயலாளர்கள் ∴ஆளுநர் செயலாளர்கள் ∴திணைக்களத் தலைவர்கள் ஆணைக்குழுச் செயலாளர்கள் ∴அரச கூட்டுத்தாபன மற்றும் நியதிச்சட்ட சபைத் தலைவர்கள்

பாராளுமன்றத் தேர்தல் - 2024
அஞ்சல் மூலம் வாக்களித்தல்

1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 2024.11.14 ஆந் திகதி நடாத்தப்படவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்காக கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கு உரித்துடைய வாக்காளர்களுக்கு அதாவது, குறித்த தேர்தலில் தேர்தற் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ள மற்றும் அத்தியாவசிய சேவைகளில் கட்டாயமாக ஈடுபடுத்தப்படவுள்ள அலுவலர்கள் தத்தமது வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் சென்று தனிப்பட்ட முறையில் வாக்களிக்க முடியாமலிருக்கும் வாக்காளர்களுக்கு அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியுள்ளது.

02. இது விடயமாக தேர்தல்கள் ஆணைக்குழுவினால் தாபனத் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அடிப்படை அறிவுறுத்தல்கள் கோவையொன்றின் பிரதி இத்துடன் அனுப்பி வைக்கப்படுகின்றது. தங்களது தாபனத்தில் அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பங்கள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென இணைப்பு அலுவலர் ஒருவரைப் பெயர் குறித்து நியமித்து, அவ்வலுவலருக்கும் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களாக நியமிக்கப்படவுள்ள அலுவலர்களுக்கும் மேற்படி சுற்றறிக்கையின் பிரதியை வழங்கி அதில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை வாசித்து, அதன் பிரகாரம் செயற்பட வேண்டுமென தெரிவித்தல் வேண்டும். அவர் ஊடாக தாபனத்தின் அனைத்து அலுவலர்களுக்கும் அறிவித்து குறித்த தினத்திற்கு முன்னர் அத்தாட்சிப்படுத்தப்படுகின்ற அஞ்சல்மூல வாக்கு விண்ணப்பங்களை உரிய மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் கையளிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். ***தேர்தற் கடமைகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளவர்கள் தவிர்ந்த ஏனைய அரச சேவையில் மற்றும் மாகாண அரச சேவையில் உள்ள அலுவலர்களாகிய தேர்தற் கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு தகைமையுள்ள அனைத்து அலுவலர்களும் அஞ்சல் மூல வாக்கிற்காக விண்ணப்பித்தல் வேண்டுமென்பதுடன், அஞ்சல் மூல வாக்கிற்கு விண்ணப்பிக்காதிருத்தல் மற்றும் குறைபாடுகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படல் போன்ற விடயங்கள் தேர்தற் கடமையிலிருந்து விடுவிப்பதற்கான காரணங்களாக அமையாது.***

03. 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக வாக்கெடுப்பினை நடாத்துவது தொடர்பில் சனாதிபதியின் கட்டளைகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2024.09.24 ஆந் திகதியிலிருந்து பத்து நாட்களுக்குள் அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பங்களை உரிய தெரிவத்தாட்சி அலுவலருக்கு கிடைக்கும் வகையில் அனுப்பி வைத்தல் வேண்டும். அதன் பிரகாரம் 2024.10.01 ஆந் திகதி தொடக்கம் 2024.10.08 ஆந் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

அதன் பிரகாரம் உங்களது தாபனத்தில் கடமையாற்றும் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்காக உரித்துடைய அனைவரினதும் விண்ணப்பங்கள் 2024.10.08 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குக் கிடைக்கப் பெற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று அதாவது 2024.10.08 ஆந் திகதி நள்ளிரவு 12.00 மணிக்கு முன்னதாக உரிய மாவட்டத் தேர்தல் அலுவலகத்திற்கு கிடைக்கப் பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன், அன்றைய தினம் தபாலில் சேர்த்தல் என்பது குறித்த விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்வதற்கான காரணமாக அமையாது.

04. அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு உரித்துடையவர்கள்

சட்டத்தின் 26(2) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அஞ்சல் மூல வாக்காளர் ஒருவராகக் கருதப்படுவதற்கு தகைமையுடையவர்கள் :

4.1 விசேட கடமைகளின் நிமித்தம் தத்தமது வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்க முடியாமற் போகும் சாத்தியமுள்ள முப்படைகளின் அங்கத்தவர்கள், இலங்கை பொலிஸ் திணைக்கள அலுவலர்கள் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையணியைச் சேர்ந்த அலுவலர்கள்.

4.2 விசேட கடமைகளின் நிமித்தம் தத்தமது வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்க முடியாமற் போகும் சாத்தியமுள்ள சிறைச்சாலைகள் திணைக்கள அலுவலர்கள், ஊழியர்கள்.

4.3 விசேட கடமைகளின் நிமித்தம் தத்தமது வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்க முடியாமற் போகும் சாத்தியமுள்ள புகையிரத சேவைகள் திணைக்கள அலுவலர்கள், ஊழியர்கள்.

4.4 விசேட கடமைகளின் நிமித்தம் தத்தமது வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்க முடியாமற் போகும் சாத்தியமுள்ள தபால் திணைக்கள அலுவலர்கள், ஊழியர்கள்.

4.5 விசேட கடமைகளின் நிமித்தம் தத்தமது வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்க முடியாமற் போகும் சாத்தியமுள்ள தொலைத்தொடர்புகள் திணைக்கள அலுவலர்கள், ஊழியர்கள்.

4.6 விசேட கடமைகளின் நிமித்தம் தத்தமது வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்க முடியாமற் போகும் சாத்தியமுள்ள மத்திய போக்குவரத்துச் சபை அல்லது பிரதேச போக்குவரத்துச் சபை அலுவலர்கள், ஊழியர்கள்.

4.7 வேட்புரிமை காரணமாக தனக்குக் குறித்தொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களிக்க முடியாமற் போகும் சாத்தியமுள்ள வேட்பாளர்

4.8 வாக்கெடுப்புத் தினத்தன்று வாக்கெடுப்பு மற்றும் அதனோடு தொடர்புடைய பணிகளில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற உள்ளூராட்சி, மாகாண அரச சேவையில் அல்லது இலங்கை மத்திய வங்கி அலுவலர்கள், ஊழியர்கள்.

4.9 வாக்கெடுப்பு மற்றும் அதனோடு தொடர்புடைய பணிகளில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற அரச பாடசாலைகளில் கடமையாற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள்.

4.10 இவை தவிர சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுடன் உடனழைத்துச் செல்கின்ற உதவியாளர்களாகிய அரச சேவைச் சிற்றூழியர்கள் (உதாரணமாக : அலுவலக சிற்றூழியர்கள், நிலஅளவை உதவியாளர்கள், பாடசாலைச் சிற்றூழியர்கள் ஆகியோருக்கும் அஞ்சல் வாக்கு வசதிகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.)

05. அத்துடன் மேற்குறிப்பிட்ட தாபனங்களின் அலுவலர்களைத் தவிர 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல சட்டத்தின் 129 ஆம் பிரிவின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின்படி அத்தியாவசிய சேவைகளை வழங்கும் தெரிவு செய்யப்பட்ட தாபனங்களில் கடமை புரிகின்ற மற்றும் வாக்கெடுப்புத் தினத்தன்று வாக்கெடுப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்படவிருக்கும் அலுவலர்களுக்கு, அஞ்சல் மூல வாக்கு வசதிகளைச் செய்து கொடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக குறித்த அலுவலகங்களின் தாபனத் தலைவர்கள், பிரதேச அலுவலகத் தலைவர்கள் கவனம் செலுத்த வேண்டியிருப்பதுடன், வாக்கெடுப்புத் தினத்தன்று மு.ப. 7.00 மணி - பி.ப. 4.00 மணி வரையான காலப்பகுதியில் தமக்கென ஒதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களிக்க முடியாத தூரத்தில் தமது வாக்கெடுப்பு நிலையம் அமைந்திருப்பதனாலும் வாக்கெடுப்புத் தினத்தன்று அத்தியாவசிய சேவைகளில் கட்டாயமாக ஈடுபடுத்தப்படுகின்றமையாலும் அவ்வலுவலர்களுக்கு மாத்திரம் இந்த உரித்து வழங்கப்படுகின்றது. ஆகையால் அவ்வலுவலர்கள் வாக்கெடுப்புத் தினத்தன்று தேர்தற் பணிகளில் ஈடுபடுகின்றமையை தாபனத் தலைவர்கள் நிச்சயப்படுத்திக் கொள்வதுடன், அவர்களது விண்ணப்பங்கள் தொடர்பாக தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தி அவ்விண்ணப்பங்களுடன் தழுவல் கடிதமொன்றையும் இணைத்து மாவட்டத் தேர்தல் அலுவலகங்களுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. தேர்தல் கடமைகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள அலுவலர்கள்

I. அமைச்சரவைச் செயலாளர்கள் மற்றும் அமைச்சுச் செயலாளர்கள் அல்லது அதையொத்த பதவிகளிலுள்ள அலுவலர்கள்.

II. தேர்தற் பணிகளுக்காக தொலைதூரம் பயணிக்க முடியாத மற்றும் தேர்தற் பணிகளில் ஈடுபட முடியாதவாறு உடற்றகுதியீனமான நிலையிலுள்ள அலுவலர்கள்

III. இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 மாத காலத்திற்குள் சேவையிலிருந்து ஓய்வு பெறவிருக்கும் அலுவலர்கள்

IV. பௌத்த மதகுருமார் மற்றும் ஏனைய மதகுருமார்.

V. கர்ப்பிணித் தாய்மார், குழந்தைகள் உள்ள தாய்ப்பாலூட்டும் பெண் அலுவலர்கள் மற்றும் தேர்தற் பணிகளில் ஈடுபடுத்த முடியாதவாறு கடுமையாக நோய்வாய்ப்பட்டவர்கள்.

மேற்கூறப்பட்ட வகையான அலுவலர்கள் மற்றும் ஏதேனும் ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணத்தினால் தேர்தற் பணிகளிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் அஞ்சல் வாக்குகளுக்காக விண்ணப்பிக்கலாகாது என்பதுடன், அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களால் குறித்த அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை அத்தாட்சிப்படுத்தலாகாது.

**07.** அஞ்சல் வாக்காளர்களின் வசதி கருதி தேர்தலுக்குச் செல்லுபடியான வாக்காளர் இடாப்பு 2024(1)CR 2024.09.30 ஆந் திகதியிலிருந்து கீழ்க்காணும் இடங்களில் காட்சிப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களையும் அதே இடத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

- அனைத்து மாவட்டச் செயலகங்கள் (கச்சேரிகள்)
- அனைத்து பிரதேச் செயலகங்கள்
- அனைத்து கிராம அலுவலர் அலுவலகங்கள்

} உரிய அதிகார பிரதேசங்களின் வாக்கெடுப்புப் பிரிவுகளுக்கான தேருநர் இடாப்புக்கள்

மேற்கூறப்பட்ட இடங்கள் தவிர,

- அரச நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கள், சுதந்திர சதுக்கம், கொழும்பு 07.
- தொழிற் திணைக்களம், தொழில் செயலகம், நாராஹேன்பிட்டி, கொழும்பு 05.
- கல்வி அமைச்சு, இசுறுபாய, பத்தரமுல்ல.
- பதிவாளர் நாயகம் திணைக்களம், 243/3/ஏ, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.
- தபால் தலைமையகம், டீ.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10.
- மீன்பிடி, நீர்வளங்கள் அபிவிருத்தி அமைச்சு, மாளிகாவத்தை.
- செத்சிறிபாய முதலாம் கட்ட அலுவலகத் தொகுதி. பத்தரமுல்ல

ஆகிய இடங்களிலும், கொழும்பு மாவட்ட அரச அலுவலகத் தொகுதிகளிலும் தேருநர் இடாப்புக்களின் தகவல்களைக் கணினி மூலம் பெற்று விண்ணப்பதாரர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**08.** அஞ்சல் வாக்குகளுக்கு விண்ணப்பித்தல்

**8.1** இம்முறை பாராளுமன்றத தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்காளர் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் கீழ்க்காணும் முக்கிய செயல்முறைகள் ஊடாக மேற்கொள்வதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. கீழே 8.1.1, 8.1.2, 8.1.3 ஆம் இலக்க விடயங்கள் தொடர்பாக விபரங்கள் அடங்கிய வழிகாட்டல்கள், ஆலோசனைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. .(PE/2024/09/A)

8.1.1 சுய நிகழ்நிலை ஊடாக விண்ணப்பித்தல் **(Self – Online Applying)** (முன்னோடித் திட்டமாக செயற்படுகின்றது.)

அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தமது தகவல்களையும் உரிய அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் தகவல்களையும் தேர்தல் இ - சேவை (https://eservices.elections.gov.lk) ஊடாக உட்படுத்தி விண்ணப்பிப்பதற்கு வாய்ப்பளிக்கப்படுகின்றது. இவ்வாறு நிகழ்நிலையாக தேர்தல் இ - சேவை ஊடாக பூர்த்தி செய்யப்பட்டு பதிவிறக்கம் செய்து விண்ணப்பத்தின் அச்சிட்ட பிரதியை (விண்ணப்பதாரியினதும், அத்தாட்சிப்படுத்தும் அலுவலரினதும் தகவல்கள் உள்ளடக்கிய) அத்தாட்சிப்படுத்தும் அலுவலரால் அத்தாட்சிப்படுத்திய பின்னர் உரிய மாவட்டத் தேர்தல் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இச்செயல்முறைக்கு விண்ணப்பதாரர் இ - சேவை கணக்கொன்றைத் (User Account) தயாரித்துக் கொள்ளல் வேண்டும்.

8.1.2 நிறுவனம் மூலமான நிகழ்நிலை ஊடாக விண்ணப்பித்தல் **(Certifying Officer Online Applying)** (முன்னோடித் திட்டமாக செயற்படுகின்றது.)

நிறுவனமொன்றில் உள்ள அனைத்து அஞ்சல் வாக்கு விண்ணப்பதாரர்களினதும் தகவல்கள் (அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் தகவல் உள்ளிட்ட) அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் அல்லது அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் உதவியாளரால் தேர்தல் இ - சேவை ஊடாக பூர்த்தி

செய்யப்பட்ட பின்னர் குறித்த விண்ணப்பங்கள் யாவற்றையும் பதிவிறக்கம் செய்து அத்தாட்சிப்படுத்தி உரிய மாவட்டத் தேர்தல் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இச்செயல்முறைக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலருக்குரிய இ - சேவை கணக்கின் மூலம் தயாரித்துக் கொள்ளல் வேண்டும்.

8.1.3 தரவுகளை அச்சிட்டுக் கொள்ளும் முறை (பகுதியளவு நிகழ்நிலை முறை)
**(Semi online data Printing Applying)**

மேலே 8.1.1 அல்லது 8.1.2 இல் குறிப்பிட்ட செயல்முறைகளைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படும் சந்தர்ப்பங்களில் தேர்தல் இ - சேவை மூலம் அஞ்சல் வாக்கு விண்ணப்பதாரியின் விண்ணப்ப இலக்கத்தை மாத்திரம் உட்படுத்தி விண்ணப்பதாரியே நிகழ்நிலை ஊடாக விண்ணப்பத்தைத் தயாரித்துக் கொள்ளலாம்.

விண்ணப்பதாரி நிகழ்நிலை ஊடாக தயாரித்து அச்சிட்ட விண்ணப்பத்தை அத்தாட்சிப்படுத்தும் அலுவலருக்கு வழங்கியதன் பின்னர் அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் தகவல்களையும் பூர்த்தி செய்து அத்தாட்சிப்படுத்திய பின்னர் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் ஊடாக உரிய மாவட்டத் தேர்தல் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**8.2.** உத்தியோகபூர்வ இணையத் தளத்தின் ஊடாக விண்ணப்பத்தைப் பெற்றுக் கொள்ளல்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்குப் (https://elections.gov.lk) பிரவேசித்து அதிலுள்ள அஞ்சல் வாக்கு விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கம் செய்து அச்சிட்டு விண்ணப்பதாரிக்குரிய தகவல்களைப் பூர்த்தி செய்த பின்னர் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் தமது தகவல்களையும் உட்படுத்தி உரிய மாவட்டத் தேர்தல் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**8.3** அச்சிட்ட விண்ணப்பத்தைப் பெற்றுக் கொள்ளல் (பொதுவான முறை)

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்படும் அச்சடித்த விண்ணப்பப் படிவமொன்றைப் பூர்த்தி செய்து அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் ஊடாக உரிய மாவட்டத் தேர்தல் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**8.4.** தேசிய அடையாள அட்டை இலக்கம் தேருநர் இடாப்பில் பதியப்பட்டிராத விண்ணப்பதாரிகளுக்கு தேருநர் இடாப்புப் புத்தகங்கள் காட்சிப்படுத்தப்படுகின்ற மேலே 07 ஆம் இலக்கப் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களிலிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ள நேரிடும்.

**8.5** ஒரே மாதிரியான பெயர்களைக் கொண்ட நபர்கள் காணப்படுவதனால் தமது தகவல்களை வேறொருவரைக் கொண்டு பரீட்சித்து அஞ்சல் வாக்கு விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அஞ்சல் வாக்கு விண்ணப்பதாரிகளைத் தெரியப்படுத்துதல் வேண்டும்.

**09.** அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை அத்தாட்சிப்படுத்துதல்

9.1 அஞ்சல் மூல வாக்குகளை அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் தமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்களை உரிய தேருநரின் மிகக்கிட்டிய தாபனத் தலைவரின் அத்தாட்சிப்படுத்தலுடன் கிடைக்கப் பெற்றுள்ளதனை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதோடு, அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் என்ற வகையில் தனது பெயர், அலுவலக முகவரி, பதவி முத்திரை, கையொப்பம் ஆகியவற்றை உட்படுத்தி அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும். தேருநரானவர் அத்தாட்சிப்படுத்தும் அலுவலராகச் செயற்படும்போது தமது விண்ணப்பத்தைத் தாமே அத்தாட்சிப்படுத்திக் கொள்ள முடியும்.

9.2 அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் ஒவ்வொரு அலுவலகத்திற்கும் உரியவாறு விசேட குறியீட்டு இலக்கங்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்தக் குறியீட்டு இலக்கங்களை அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களை நியமிக்கும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்படல் வேண்டும். ஒவ்வொரு அலுவலகத்திற்கும் உரிய குறியீட்டு இலக்கங்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் இணையத் தளத்திற்குள் பிரவேசிப்பதன் மூலமாகவோ உரிய மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் வினவுவதன் மூலமாகவோ பெற்றுக் கொள்ள முடியும். (கடந்த சனாதிபதித் தேர்தலின்போது பாவிக்கப்பட்ட நிறுவன குறியீட்டு இலக்கத்தினை பாவிக்க முடியும்)

**10.** அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி

10.1 அத்தாட்சிப்படுத்தும் அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை அன்றைய தினமே தவறாமல் உரிய மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். இதற்காக இலவச அஞ்சல்

வசதிகள் வழங்கப்படுவதனால், முத்திரை ஒட்ட வேண்டிய அவசியமில்லை. "முன்னுரிமைச் சேவை" என்னும் லேபலை அல்லது அவ்வாசகத்தை கடித உறையின் மேற்பகுதியில் தெளிவாக எழுதுவது போதுமானதே. அத்தாட்சிப்படுத்திய அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பங்களை ஒவ்வொன்றாகப் பரிசீலித்து அஞ்சல் வாக்காளரின் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ள மாவட்டத் (தேர்தல் அலுவலகம்) தெரிவத்தாட்சி அலுவலருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

10.2 அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியின் பின்னர் தபாலிலோ அல்லது வேறு விதமாகவோ கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம். ஆகவே அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினத்தில் விண்ணப்பங்களை அத்தாட்சிப்படுத்தி தபாலில் சேர்ப்பதனாலோ அல்லது வேறு விதமாகக் கையளிப்பதாலோ தெரிவத்தாட்சி அலுவலரிடம் உரிய நேரத்தில் போய்ச் சேர்வதில் சிக்கல்கள் ஏற்படலாமென்பதனால், இறுதியான 02 நாட்களுக்குள் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை தமது அலுவலகம் அமைந்துள்ள மாவட்டத்தின் தேர்தல் அலுவலகத்திற்கு நேரில் சென்று கையளிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்குதல் வேண்டும். வெவ்வேறு மாவட்டத் தேர்தல் அலுவலகங்களுக்குக் கையளிக்கப்பட வேண்டிய விண்ணப்பங்களை அந்தந்த விண்ணப்பதாரிகளின் பெயர் பதியப்பட்டுள்ள மாவட்டங்களுக்கு அனுப்பி வைப்பதற்காக மாவட்ட ரீதியாக வேறு பிரித்து உறைகளில் இட்டு உரிய மாவட்டங்களின் மாவட்டத் தேர்தல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

10.3 அந்தந்த மாவட்டங்களின் அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய தெரிவத்தாட்சி அலுவலர்களின் அலுவலக முகவரிகளைக் காட்டும் அட்டவணை ஒன்று இணைப்பு II என இத்துடன் அனுப்பி வைக்கப்படுகின்றது.

## 11. அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களை நியமித்தல்

அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் நியமனங்கள் தொடர்பான தகவல்களைப் பூர்த்தி செய்வதற்கு இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் (இணைப்பு I) படிவத்தைப் பயன்படுத்த வேண்டுமென்பதுடன், உரிய அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் நியமனக் கடிதங்களை நிறுவனம் அமைந்துள்ள மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு மாத்திரம் அனுப்பி வைக்க வேண்டுமென்பதையும் அறிவிக்கின்றேன். இந்நியமனக் கடிதங்களை இராஜகிரிய, சரண மாவத்தையில் அமைந்துள்ள தேர்தல்கள் செயலகத்திற்கு அனுப்பி வைப்பதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்வதுடன், தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படும் அவ்வாறான நியமனக் கடிதங்களை மீளவும் மாவட்டத் தேர்தல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாதென்பதை மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

11.1 ஏதேனுமொரு அலுவலகத்தில் பெருமளவு எண்ணிக்கையிலான விண்ணப்பதாரிகள் இருக்கும் போது குறித்த தாபனத் தலைவர்களால் மேலும் சிலரை அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களாக நியமிக்க வேண்டிய தேவை ஏற்படலாமென்பதோடு, கடந்த தேர்தல்களின் போது அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களாப் பணியாற்றியவர்களின் தகவல்கள் அடங்கிய ஆவணங்களைப் பயன்படுத்தி தேர்தல்கள் ஆணைக்குழுவினால் இந்த பாராளுமன்றத் தேர்தலுக்குரிய அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் நியமனங்கள் மேற்கொள்ளப்பட மாட்டாதென்பதனை மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

11.2 கடந்த தேர்தல்களின் போது அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களாக ஆர்வத்தோடும், சரியாகவும் பணியாற்றிய அனுபவங்கள் நிறைந்த அலுவலர்களுக்கு முன்னுரிமை வழங்கி பதவிநிலை அலுவலர்களை நியமித்தல் உசிதமானது.

11.3 கடந்த சனாதிபதித் தேர்தலின் போது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட அல்லது கவனயீனமாகச் செயலாற்றிய அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களை இம்முறை அப்பதவிகளில் நியமிக்காதிருப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

11.4 தபாலில் கிடைக்கப் பெறும் காப்புறுதி அஞ்சல் வாக்குப் பொதிகளைப் பாதுகாப்பாக தமது பொறுப்பில் வைத்துக் கொள்வதற்கான வசதிகளைக் கொண்டுள்ள அலுவலரொருவரை இதற்காக நியமிப்பது உகந்தது.

11.5 அஞ்சல் வாக்காளர்களுக்கு இலகுவாகச் செல்லக்கூடிய இடத்தில் அமைந்துள்ள அலுவலகத்திலுள்ள ஒரு அலுவலரை குறித்த அஞ்சல் வாக்காளர்களுக்கான அத்தாட்சிப்படுத்தும் அலுவலராக நியமித்தல் உகந்தது.

11.6 விசேடமாக அரசியல் ரீதியான தொடர்புகளைக் கொண்டுள்ளவர்களை அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களாக நியமிக்காதிருப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

11.7 அஞ்சல் வாக்கெடுப்பு தொடர்பான முழுப் பொறுப்பையும் அத்தாட்சிப்படுத்தும் அலுவலரிடமே ஒப்படைக்கப்படுமென்பதனால், அவ்வாறு பொறுப்புடன் பணியாற்றும் அலுவலர்களை மாத்திரம் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களாக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

11.8 அஞ்சல் வாக்கெடுப்பின் போது பணியாற்றும் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் அலுவலகக் குறியீட்டு இலக்கம் என்பவற்றை கட்டாயமாக விண்ணப்பங்களில் குறிப்பிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

11.9 அஞ்சல் வாக்குச் சீட்டுக்களை அடையாளமிடுவதற்காக அதிகபட்சம் இரண்டு நாட்களாக மட்டுப்படுத்தி உள்ளமையால், ஒரு அலுவலருக்கு ஆகக்கூடியது 200 - 250 வரையான வாக்குச் சீட்டுக்கள் அடையாளமிடும் பணிகளில் அத்தாட்சிப்படுத்தும் அலுவலராக ஈடுபடுத்தலாம்.

11.10 அஞ்சல் வாக்கெடுப்பு நிகழும் தினத்திற்கு முன்னதாக சேவையிலிருந்து ஓய்வு பெறவிருக்கும் மற்றும் வெளிநாடு செல்லவிருக்கும் அலுவலர்களை அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களாக நியமிக்காதிருத்தல் வேண்டும்.

11.11 அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களாக நியமிக்கப்படும் அலுவலர்கள் குறித்த காலப்பகுதிக்குள் அலுவலகத்தில் பிரசன்னமாயிருத்தல் வேண்டுமென்பதுடன், வெளிக்களப் பணிகளில் ஈடுபடுவதை முடிந்தவரை தவிர்த்துக் கொண்டு செயற்படுதல் வேண்டுமென அறிவுறுத்தப்பட வேண்டும்.

**12.** அஞ்சல் வாக்குகளை அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு தம்மால் அத்தாட்சிப்படுத்திய விண்ணப்பதாரிகளின் பதிவேடொன்றைப் பேணி வருமாறு அறிவுறுத்தப்பட வேண்டியதுடன், அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பங்களை அத்தாட்சிப்படுத்திய பின்னர் அவற்றை ஏற்றுக் கொண்டுள்ளமை அல்லது நிராகரிக்கப்பட்டமை தொடர்பாக அறிவிக்கப்பட வேண்டியுள்ளது. அத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட அஞ்சல் மூல வாக்காளர்களுக்கு வாக்குச் சீட்டு அடங்கிய பொதிகளை அனுப்பி வைப்பதற்காக அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் பெயர், பதவி, அலுவலகக் குறியீட்டு இலக்கம், அலுவலக முகவரி ஆகியவற்றை (கட்டாயமாக பதவி முத்திரையுடன்) விண்ணப்பங்களில் குறிப்பிடுமாறு அறிவுறுத்தல் வழங்கவும்.(இனைப்பு III)

**13.** பூர்த்தி செய்யப்பட்ட அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பங்களில் அடங்கியுள்ள தகவல்கள் சரியானவை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு அத்தாட்சிப்படுத்தும் அலுவலரால் அத்தாட்சிப்படுத்திய பின்னர் அவற்றை உரிய மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அத்துடன் ஒரு விண்ணப்பதாரி ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பாராயின், அவற்றைச் சிபாரிசு செய்தல் மற்றும் போலியான தகவல்கள் அடங்கிய விண்ணப்பங்களை அனுப்பி வைப்பதையும் தவிர்க்குமாறு மிகவும் வலியுறுத்திக் கூறுகின்றேன்.

அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கான தகவல்களைப் பெற்றுக் கொள்ளல், அவற்றைச் சமர்ப்பித்தல், அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் நியமனங்கள் போன்றவை தொடர்பான விடயங்கள் மாத்திரம் இச்சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், அஞ்சல் வாக்கெடுப்புச் செயன்முறைக்கு அவசியமான ஏனைய அறிவுறுத்தல்கள் மற்றும் கடமை நடபடிமுறைகள் பற்றி அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்காக எதிர்வரும் நாட்களில் நடாத்தப்படுகின்ற அறிவுறுத்தல் அமர்வுகளின் போது தெரிவத்தாட்சி அலுவலர்களால் வழங்கப்படும். தெரிவத்தாட்சி அலுவலர்களால் நடாத்தப்படுகின்ற அறிவுறுத்தல் அமர்வுகளுக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களை சமுகமளிக்கச் செய்தல் அத்தியாவசியமானதென அவர்களை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் இது பற்றியும் இது விடயமாக ஏதேனும் தெளிவுபடுத்தல்கள், மேலதிக விடயங்கள் அறிந்து கொள்ளல் அவசியமாயின் உடனடியாக தேர்தல்கள் ஆணைக்குழு தலைமையலுவலகத்தில் அல்லது உரிய மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளும்படி தெரிவித்துக் கொள்கின்றேன்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணைப்படி,

சமன் ஸ்ரீ ரத்நாயக்க
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

பிரதிகள் :

01. அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்கள்
02. அனைத்து மாவட்ட பிரதி உதவித் தேர்தல் ஆணையாளர்கள்
03. தலைமையலுவலகத்தின் அனைத்து பதவிநிலை அலுவலர்கள்

} தகவலுக்காக மற்றும் அரச நிறுவனங்களை அறிவுறுத்துவதற்காக.



සභාපති
*தவிசாளர்*
දුරකථන/தொலைபேசி :011-2868444
ෆැක්ස්/தொலைநகல் :011-2868445
*e-mail : chairman@elections.gov.lk*
*e-mail : comelesl@sltnet.lk*

මැතිවරණ කොමසාරිස් ජනරාල්
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்
දුරකථන/தொலைபேசி:011-2885207
ෆැක්ස්/தொலைநகல் :011-2885208
***e-mail: cgelection@elections.gov.lk***

අතිරේක මැතිවරණ කොමසාරිස් (ජාතික මැතිවරණ)
மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (தேசியத் தேர்தல்கள்)
දුරකථන/தொலைபேசி : 011-2868447
ෆැක්ස්/தொலைநகல் :011-2868368

# இ-சேவைக் கணக்கொன்றை (e-services account) தயாரித்துக் கொள்ளல்

01) தேர்தல் இ-சேவைக் கணக்கொன்றைத் தயாரித்துக் கொள்வதற்காக **https://eservices.elections.gov.lk** என்ற தேர்தல் இ-சேவை இணையத்தளத்தினுட் பிரவேசித்து அதிலுள்ள **SignUp** ஐ அணுகுங்கள்.




03) அதில் கேட்கப்படும் தகவல்களை ஆங்கில மொழில் மாத்திரம் உட்படுத்தவும். இதற்கு கணக்கைத் தயாரித்துக்கொள்பவரின் தனிப்பட்ட தகவல்களை உட்படுத்த வேண்டும். எக்காரணத்தினாலும் கடமை சார்ந்த தகவல்களை அல்லது மற்றொருவரின் தகவல்களை இங்கு உட்படுத்தலாகாது.

இங்கு,

**SLIN / NIC:**
தேசிய அடையாள அட்டை இலக்கத்தை சரியான முறையில் உட்படுத்தவும். அதனை மீண்டும் பல தடவைகள் சரியாக உட்படுத்தப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிக்கவும். அந்த அடையாள அட்டை இலக்கத்தை உட்படுத்தியதும் அதன் பயனாக உங்களுக்குரிய பயனர் கணக்கின் பெயர் தானியங்கி முறையில் உருவாகும். அது User Name என்ற இடத்தில் தோற்றமளிக்கும். இந்த பயனர் பெயர் உங்கள் அடையாள அட்டை இலக்கத்திற்குச் சமமான 12 இலக்கங்களைக் கொண்டதாகும். அதனை மாற்றுவதற்கு வாய்ப்பில்லை.

**Registered Mobile No :**
என்பதன் கீழ் உங்களுக்கே உரிய எப்பொழுதும் பாவனையில் இருக்கும் கையடக்கத் தொலைபேசி இலக்கத்தை உட்படுத்தவும். கணக்கிற்குரிய மேலதிக தகவல்கள் குறும் தகவல்களாக (SMS) இந்த இலக்கத்திற்குக் கிடைக்கும்.

**Email :**
என்பதன் கீழ் உங்களுக்கே உரிய எப்பொழுதும் பாவனையிலுள்ள தனிப்பட்ட மின்னஞ்சல் (e-mail) முகவரியை உட்படுத்தவும். உங்களது அலுவலக அல்லது வேறு மின்னஞ்சல் முகவரிகளை உட்படுத்துவதைத் தவிர்க்கவும்.

**Password :**
என்பதன் கீழ் எவராலும் ஊகித்து அறிய முடியாத அதேபோல் உங்களுக்கு இலகுவாக ஞாபகத்தில் வைத்திருக்கக்கூடிய உறுதியான ஒரு கடவுச்சொல்லை (password) தயாரித்து உட்படுத்தவும். இனிவரும் நடவடிக்கைகளின்போது இக்கடவுச் சொல்லையே உங்களது பயனர் பெயருடன் பயன்படுத்த வேண்டும். கடவுச்சொல்லை உட்படுத்தியதன் பின்னர் **Password (Retype)** என்ற இடத்திற்கு மீண்டும் அதே கடவுச்சொல்லை உட்படுத்தவும்.

04) அதன் பின்னர் பின்வரும் இடங்களில் ☑ அடையாளமிட்டு **Sign Up** என்ற பொத்தானை அழுத்தவும்.


☐ I accept the Terms of Service

☐ I'm not a robot — reCAPTCHA Privacy - Terms


Instructions

✔ Sign Up    Reset

05) அப்போது நீங்கள் உட்படுத்திய கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு சரிபார்க்கும குறியீடு கிடைக்கும். அதனை உட்படுத்தக்கூடிய விதத்தில் திரை மாற்றமடையும்.




06) அந்த இடத்தில் உங்களது கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்குக் கிடைத்துள்ள குறியீட்டை உட்படுத்தவும். அப்போது கணக்கு வெற்றிகரமாக தயாரித்து முடிக்கப்பட்டிருக்கும் என்பதுடன், கணக்கில் உட்படுத்துவதற்கு பயனர் பெயரையும் கடவுச் சொல்லையும் வினவும் திரை தோன்றும்.




07) உங்களது (12 இலக்கங்களைக் கொண்ட) பயனர் பெயரையும் நீங்கள் தயாரித்துக் கொண்ட கடவுச்சொல்லையும் அங்கு உட்படுத்தி இனிவரும் நடவடிக்கைகளுக்காக கணக்கினுட் பிரவேசிக்கவும்.

PE/2024/30/01/F1
(மாதிரி)

அலுவலக முகவரி: ..........................................
..........................................
..........................................

திகதி: 20........ / ........ / ........

மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்,

...................................................... மாவட்டம்

## பாராளுமன்றத் தேர்தல் 2024
## அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களை நியமித்தல்

01. நிறுவனத்தின்பெயர்

..........................................................................................................................

02. (அ) அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் பெயர்:- ..................................................

(ஆ) தேசிய அடையாள அட்டை இலக்கம் | | | | | | | | | | | | |

(இ) அலுவலக குறியீட்டு இலக்கம்* | | |■| | | | |■| | | |■| |

03. பதவி:-

..........................................................................................................................

04. (அ) அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் அலுவலகம் அமைந்துள்ள மாவட்டம்:- ..............................

(ஆ) அலுவலகமுகவரி:-

..........................................................................................................................

(இ) அலுவலக தொலைபேசி: .................. (ஈ) தொலைநகல்: ................ (உ) மின்னஞ்சல்: ..................

05. (அ) தனிப்பட்ட முகவரி:- ..........................................................................................

(ஆ) தொலைபேசி இலக்கம் (செல்லிட):- ..........................................................................

06. அலுவலரின் மாதிரிக் கையொப்பம்:- ..................................................

மாதிரிக் கையொப்பம் [ ] பதவி முத்திரை [ ]

07. அஞ்சல்வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் என்ற வகையில் மேலே குறிப்பிடப்பட்டஅலுவலர்அண்ணளவாக அஞ்சல் வாக்காளர் (எண்ணிக்கைக்கு) உரிய இக்கடமைகளை நிறைவேற்றுகின்றா
..........................................................................................................................

08. தாபனத் தலைவரின் விதப்புரை:-

மேலே குறிப்பிடப்பட்ட அலுவலரை பாராளுமன்றத் தேர்தல 2024 சார்பாக அஞ்சல் வாக்கு அத்தாட்சிப் அலுவலரொருவராக இத்தால் நியமிக்கின்றேன். அவருக்குரிய கடமைகள் சம்பந்தமாக அவரை அறிவுறுத்த அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்பதையும் அறிவிக்கின்றேன்.

அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலரை நியமிக்கும் தாபனத் தலைவரின் -
பெயர்: ..........................................................................................................
தேசிய அடையாள அட்டை இலக்கம்: ....................................................................
பதவி: ..........................................................................................................
தொலைபேசி இலக்கம்: அலுவலக: ................ செல்லிட: .................. தொலைநகல்: ..................
மின்னஞ்சல் முகவரி: ....................................................................................

கையொப்பம்: ........................................................
பதவி முத்திரை: ........................................................

*(இப்படிவத்திலுள்ள எல்லா விபரங்களையும் பூரணப்படுத்துதல் வேண்டும்.)*

**இக்குறியீட்டு இலக்கத்தை www.elections.gov.lk என்ற இணையத்தளத்திலிருந்து அல்லது மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திலிருந்து கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.*

இணைப்பு II

அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலகங்கள்

| | முகவரி | | தொலைபேசி இலக்கம் | | மாவட்டத் தேர்தல் அலுவலகத் தொலைநகல் இலக்கம் |
|---|---|---|---|---|---|
| | | | மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் | மாவட்டத் தேர்தல் அலுவலகம் | |
| 01 | மாவட்டச் செயலகம் | கொழும்பு | 0112369134 | 011-2369437/38 | 011-2369279/481 |
| 02 | மாவட்டச் செயலகம் | கம்பஹா | 0332222235 | 033-2222047 | 033-2222047 |
| 03 | மாவட்டச் செயலகம் | களுத்துறை | 0342222235 | 034-2222266 | 034-2222247 |
| 04 | மாவட்டச் செயலகம் | கண்டி | 0812222233.'.35 | 081-2233187 | 081-2233190 |
| 05 | மாவட்டச் செயலகம் | மாத்தளை | 0662222236 | 066-2222422 | 066-2222422 |
| 06 | மாவட்டச் செயலகம் | நுவரெலியா | 0522222235 | 052-2222325 | 052-2222325 |
| 07 | மாவட்டச் செயலகம் | காலி | 0912222233/ 0912222235 | 091-2234028 | 091-2234018 |
| 08 | மாவட்டச் செயலகம் | மாத்தறை | 0412222235 | 041-2222305 | 041-2222305 |
| 09 | மாவட்டச் செயலகம் | அம்பாந்தோட்டை | 0472256235 | 047-2256248 | 047-2256495 |
| 10 | மாவட்டச் செயலகம் | யாழ்ப்பாணம் | 0212222235 | 021-2222655 | 021-2228002 |
| 11 | மாவட்டச் செயலகம் | கிளிநொச்சி | 0212283945 | 021-2285664 | 021-2285667 |
| 12 | மாவட்டச் செயலகம் | வவுனியா | 0242222235 | 024-2222311 | 024-2222311 |
| 13 | மாவட்டச் செயலகம் | மன்னார் | 0232222235 | 023-2222289 | 023-2222289 |
| 14 | மாவட்டச் செயலகம் | முல்லைத்தீவு | 0212290035 | 021-2061426 | 021-2061426 |
| 15 | மாவட்டச் செயலகம் | மட்டக்களப்பு | 0652224435 | 065-2224312 | 065-2224374 |
| 16 | மாவட்டச் செயலகம் | அம்பாறை | 0632222233 | 063-2224342 | 063-2224342 |
| 17 | மாவட்டச் செயலகம் | திருகோணமலை | 0262222235 | 026-2222304 | 026-2224975 |
| 18 | மாவட்டச் செயலகம் | குருநாகல் | 0372222235 | 0372222369 | 037-2221549 |
| 19 | மாவட்டச் செயலகம் | புத்தளம் | 0322265235 | 032-2265246 | 032-2265246 |
| 20 | மாவட்டச் செயலகம் | அநுராதபுரம் | 0252235479 | 025-2222551 | 025-2222551 |
| 21 | மாவட்டச் செயலகம் | பொலொன்னறுவை | 0272222235 | 027-2222012 | 027-2222012 |
| 22 | மாவட்டச் செயலகம் | பதுளை | 0552222235 | 055-2222424 | 055-2222424 |
| 23 | மாவட்டச் செயலகம் | மொணறாகலை | 0552276235 | 055-2276315 | 055-2276291 |
| 24 | மாவட்டச் செயலகம் | இரத்தினபுரி | 0452222237 | 045-2222023 | 045-2223059 |
| 25 | மாவட்டச் செயலகம் | கேகாலை | 0352222235 | 035-2222561 | 035-2233050 |

பாராளுமன்றத் தேர்தல் 2024

## அஞ்சல் வாக்கிற்காக விண்ணப்பித்தல் பற்றிய தகவல்கள்

| தொ. இல. | அஞ்சல் வாக்காளரின் பெயர் | பதவி | அலுவலக முகவரி | அத்தாட்சிப்படுத்தும் அலுவலருக்கு அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த திகதி | அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் உரிய தெரிவத்தாட்சி அலுவலருக்கு அனுப்பிவைக்கப்பட்ட திகதி | அஞ்சல் வாக்காளரின் பதிவுக்கு உரிய தகவல்கள் | | | | தெரிவத்தாட்சி அலுவலரினால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக/ நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருப்பின், அத்தீர்மானம் பற்றிய கடிதத்தின் விபரங்கள் | அஞ்சல் வாக்குச்சீட்டு அடங்கிய காப்புறுதி உறை கிடைக்கப் பெற்ற திகதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | நிர்வாக மாவட்டம் | தேர்தல் மாவட்ட இலக்கமும் பெயரும | வாக்கெடுப்பு மாவட்ட இலக்கம் | தொடர் இலக்கம் | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |

කාර්යාලයීය කේත අංකය | | | | | | | | | | |

**පී.ඊ. 2/එස්.**

### 1981 අංක 1 දරන පාර්ලිමේන්තු මැතිවරණ පනත
### තැපැල් ඡන්දදායකයකු වශයෙන් සලකනු ලැබීම සඳහා ඉල්ලුම් කිරීම
(ආකෘතිය සම්පූර්ණ කිරීමට පෙර පසුපිට සටහන සහ උපදෙස් බලන්න.)

"අ" ආකෘතිය

අංක..............දරන.................................. මැතිවරණ කොට්ඨාසයේ තේරීම් භාර නිලධරයා වෙත,

............................................................................................ (වන) | | | | | | | | | | | | |

(නම)

දරන ජාතික හැඳුනුම්පත හිමි මම, පූර්වෝක්ත මැතිවරණ කොට්ඨාසයේ ඡන්ද හිමි නාමලේඛනයෙහි ........................................
................................................................................................ යනුවෙන් මගේ

නම දැක්වෙන බව මෙයින් ප්‍රකාශ කරමි.

දැනට වලංගු ඡන්ද හිමි නාමලේඛනයේ මගේ නම ලියාපදිංචියට අදාළ විස්තර පහත දැක්වේ :

| | | | |
|---|---|---|---|
| පරිපාලන දිස්ත්‍රික්කය: | | ග්‍රාම නිලධාරී කොට්ඨාසය: | |
| ඡන්ද ප්‍රදේශයේ අක්ෂරය හා නම: | | වීදියේ / ගමේ නම: | |
| ඡන්ද කොට්ඨාසයේ අංකය: | | මගේ නමට අයත් අනුක්‍රමික අංකය: | |
| ගෘහ මූලිකයාගේ නම: | | | |

* (1) *(අ) ශ්‍රී ලංකා යුද හමුදාවේ* / ශ්‍රී ලංකා නාවික හමුදාවේ* / ශ්‍රී ලංකා ගුවන් හමුදාවේ සාමාජිකයකු වශයෙන්;

*(ආ) පොලිස් දෙපාර්තමේන්තුවේ* / බන්ධනාගාර දෙපාර්තමේන්තුවේ* / ශ්‍රී ලංකා ආණ්ඩුවේ දුම්රිය දෙපාර්තමේන්තුවේ* / තැපැල් දෙපාර්තමේන්තුවේ සහ විදුලි සංදේශ දෙපාර්තමේන්තුවේ* / ශ්‍රී ලංකා මධ්‍යම ගමනාගමන මණ්ඩලයේ*/ ................................................................................................ ප්‍රාදේශීය ගමනා ගමන මණ්ඩලයේ නිලධරයකු හෝ සේවකයකු වශයෙන්;

*(ඇ) තෝරා පත්කර ගැනීම හා සම්බන්ධිත කාර්ය සඳහා පත්කරනු ලැබූ* / පත්කරනු ලැබීමට ඉඩ ඇති රජයේ සේවයේ නිලධරයකු හෝ සේවකයකු වශයෙන්;

*(ඈ) ඒ තෝරා පත්කර ගැනීම හා සම්බන්ධිත කාර්ය සඳහා පත්කරනු ලැබූ* / පත්කරනු ලැබීමට ඉඩ ඇති ශ්‍රී ලංකා මහ බැංකුවේ නිලධරයකු හෝ සේවකයකු වශයෙන්;
මගේ සේවා නියුක්තියේ විශේෂ අවස්ථානුගත කරුණුවල හේතුවෙන්;

*(2) අංක ......................... දරන..............................................මැතිවරණ කොට්ඨාසය සඳහා මා අපේක්ෂකයකු වීම හේතුවෙන්,

මට වෙන්කරන ලද ඡන්ද පොළට පෞද්ගලිකව ගොස් මට ඡන්දය දීමට නොහැකි* / නොහැකි වීමට ඉඩ ඇති බැවින්, ඉහත සඳහන් මැතිවරණ කොට්ඨාසය සඳහා මන්ත්‍රීවරයන් තෝරාපත්කර ගැනීමේ දී තැපැල් ඡන්දදායකයකු වශයෙන් සළකනු ලැබීමට මම මෙයින් ඉල්ලුම් කරමි.

මගේ ඡන්ද පත්‍රිකාව සහ අනිකුත් ලේඛන එවනු ලැබිය යුතු ලිපිනය පහත දැක්වේ :

පසු පිටේ දැක්වෙන සටහන ප්‍රකාර සහතික කිරීමේ නිලධරයකු වශයෙන් ක්‍රියා කිරීමට ඉල්ලුම්කරුට හිමිකමක් නොමැති නම්, ඉල්ලුම්කරුගේ සහතික කරන නිලධරයාගේ නිල නාමය සහ ලිපිනය සඳහන් කරන්න. } ....................................
....................................
....................................

සහතික කිරීමේ නිලධරයකු වශයෙන් ක්‍රියාකිරීමට ඉල්ලුම්කරුට හිමිකම තිබේ නම්, ඉල්ලුම්කරුගේ නිල නාමය සහ ලිපිනය සඳහන් කරන්න. } ....................................
....................................

....................................
ඉල්ලුම්කරුගේ අත්සන.

දුරකථන අංකය: රාජකාරි: ....................................  තනතුර: ....................................
පෞද්ගලික:....................................  රාජකාරි ලිපිනය: ....................................
දිනය: ....................................

ඉල්ලුම්කරු, සහතික කිරීමේ නිලධරයාගේ කාර්යාලයේම/ ආයතනයේම/විද්‍යාලේම සේවය නොකරන්නේ නම් ඉල්ලුම්කරුගේ අනන්‍යතාව සම්බන්ධයෙන් සහතික කිරීමේ නිලධරයා සෑහීමකට පත්වීම සඳහා පසුපිටේ දැක්වෙන සහතිකය, ඉල්ලුම්කරුගේ කාර්යාලයේ / ආයතනයේ / විද්‍යාලේ ප්‍රධානියා විසින් සම්පූර්ණ කිරීම අත්‍යවශ්‍යය. (උදාහරණ :- කලාප අධ්‍යාපන අධ්‍යක්ෂ සහතික කිරීමේ නිලධාරියා වන අවස්ථාවක ගුරුවරුන් සම්බන්ධයෙන් එම ගුරුවරුන් සේවය කරන විද්‍යාලේ විද්‍යාල්පති විසින් පසුපිටේ සඳහන් සහතිකය සම්පූර්ණ කළ යුතුයි.)

1. ඉල්ලුම්කරු තැපැලෙන් ඡන්දය දීම සඳහා හිමිකම ඇති අයකු බවට නිසැකවීමි.
2. මා*/ ඉල්ලුම්කරු විසින් මෙම ඉල්ලුම් පත්‍රයෙහි සඳහන් කරන ලද කරුණු හේතුකොටගෙන මට*/ඔහුට වෙන්කරන ලද ඡන්ද පොළට පෞද්ගලිකව ගොස් මට*/ඔහුට ඡන්දය දීමට නොහැකි*/නොහැකි වීමට ඉඩ ඇති බව මම මෙයින් සහතික කරමි.
3. මේ ඉල්ලුම් පත්‍රයේ දැක්වෙන මගේ නිල නාමය සහ ලිපිනය නිවැරදිය.
(ඉල්ලුම්කරුගේ අනන්‍යතාව, ජාතික හැඳුනුම්පත හෝ වෙනත් හැඳුනුම්පතක් මගින් තහවුරු කර ගැනීමෙන් අනතුරුව හෝ පසුපිටේ සඳහන් කාර්යාලයේ/ආයතනයේ/විද්‍යාලේ ප්‍රධානියාගේ සහතිකය හරහා අනන්‍යතාව පිළිබඳව සෑහීමකට පත්වීමෙන් අනතුරුව ඉල්ලුම්කරුගේ සහතික කිරීමේ නිලධාරියා විසින් අයදුම්පත්‍රය සහතික කිරීමට වග බලා ගත යුතුය).

ම ආකෘතිය සිංහල, දෙමළ, ඉංග්‍රීසි භාෂාත්‍රයෙන්ම ලබාගත හැකිය. ඔබේ අවශ්‍යතාව පිළිබඳව මැතිවරණ කාර්යාලය විමසීම යෙහෙකි.
படிவத்தை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பெற்றுக் கொள்ள முடியும். உங்கள் தேவைப்பாடு தொடர்பாகத் தேர்தல்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.
is form is available in Sinhala, Tamil and English Languages. You may contact the Elections Office for your requirement.

සහතික කිරීමේ නිලධාරී,

තැපෑලෙන් ඡන්දය දීම සඳහා පසුපිටේ දැක්වෙන තොරතුරු සපයා ඇති..............................................................

.................................... මයා/මිය/මෙනවිය ජාතික හැඳුනුම්පත් අංක | | | | | | | | | | | | |

අයදුම්කරු මගේ කාර්යාලයේ/ආයතනයේ/ශාඛාවේ/විද්‍යාලයේ සේවය කරන බව සහතික කරමි.

.............................................
අත්සන
ඉල්ලුම්කරු සේවය කරන කාර්යාලයේ/ආයතනයේ/
ශාඛාවේ/විද්‍යාලයේ ප්‍රධානියා

රාජකාරී ලිපිනය : .............................................  නම : .............................................................
දුරකථන අංකය : රාජකාරී : ..............................  තනතුර : .............................................................
පෞද්ගලික :..........................

## සටහන

1. සෑම ඉල්ලුම් පත්‍රයක් ම, මැතිවරණයක් පවත්වන ලෙස නියම කරමින් කරන ලද ප්‍රකාශනය හෝ ආඥාව පළ කරනු ලැබූ දිනයේ සිට දින හතකට කලින් නොවන හා දින දහ හතරකට පසුව නොවන දිනයක, ඉල්ලුම්කරු ඡන්දහිමියකු වශයෙන් ලියාපදිංචි වී සිටින මැතිවරණ කොට්ඨාසයේ තේරීම්භාර නිලධරයා වෙත ඉදිරිපත් කරනු ලැබිය යුතුය.

2. සෑම ඉල්ලුම් පත්‍රයක්ම නිසි පරිදි පුරවා තිබිය යුතුය. එසේ නොවුවහොත් තේරීම්භාර නිලධරයා විසින් එය ප්‍රතික්ෂේප කරනු ලැබීමට යටත් වන්නේය.

3. සෑම ඉල්ලුම්කරුවකුටම තේරීම්භාර නිලධරයාගේ තීරණය දන්වනු ලැබේ.

4. ඉල්ලුම් පත්‍රය අනුමත කරනු ලැබූ යම් ඉල්ලුම්කරුවකු සහතික කිරීමේ නිලධරයකු වශයෙන් කටයුතු කිරීමට හිමිකම ලබා ඇත්නම්, ඔහුගේ ඉල්ලුම් පත්‍රයෙහි දක්වා ඇති ඔහුගේ නමට සහ ලිපිනයට හෝ, ඔහු එසේ හිමිකම ලබා නොමැතිනම්, ඔහුගේ ඉල්ලුම් පත්‍රයෙහි නිල නාමය සහ ලිපිනය දක්වා ඇති සහතික කිරීමේ නිලධරයාගේ භාරය යටතේ හෝ ඡන්ද පත්‍රිකාව සහ අනෙකුත් ලේඛන යවනු ලැබේ.

5. "සහතික කිරීමේ නිලධරයා" යන යෙදුම -

   (අ) ශ්‍රී ලංකා යුද්ධ හමුදාවේ හෝ ශ්‍රී ලංකා නාවික හමුදාවේ හෝ ශ්‍රී ලංකා ගුවන් හමුදාවේ සාමාජිකයකු වන යම් ඉල්ලුම්කරුවකු සම්බන්ධයෙන් යෙදෙන විට –

      (i) ඒ ඉල්ලුම්කරු ඒ යුද්ධ හමුදාවේ හමුදාධිපති හෝ ඒ නාවික හමුදාවේ හමුදාධිපති හෝ ඒ ගුවන් හමුදාවේ හමුදාධිපති නම්, නැතහොත් ඒ ඉල්ලුම්කරු, තමා සේවය කරන ඒකකයේ හෝ ආයතනයේ ඊළඟට සිටින කාර්යභාර නිලධරයා වන්නේ නම්, ඒ ඉල්ලුම්කරු ඉන් අදහස් වේ; නැතහොත්

      (ii) ඒ ඉල්ලුම්කරු මේ අනුඡේදයේ (i) වන කොටසෙහි සඳහන් තැනැත්තකු නොවන්නේ නම්, ඉල්ලුම්කරු සේවය කරන ඒකකයේ හෝ ආයතනයේ ඊළඟට සිටින කාර්ය භාර නිලධරයා ඉන් අදහස් වේ;

   (ආ) රජයේ සේවයේ හෝ ශ්‍රී ලංකා මහ බැංකුවේ නිලධරයකු හෝ සේවකයකු වන යම් ඉල්ලුම්කරුවකු සම්බන්ධයෙන් යෙදෙන විට -

      (i) ඒ ඉල්ලුම්කරු, යම් කාර්යාලයක් භාරව සිටින නිලධරයා වන්නේ නම්, ඒ ඉල්ලුම්කරු ඉන් අදහස් වේ; නැතහොත්

      (ii) ඒ ඉල්ලුම්කරු මේ අනුඡේදයේ (i) වන කොටසෙහි සඳහන් තැනැත්තකු නොවන්නේ නම්, ඉල්ලුම්කරු සේවය කරන කාර්යාලය භාරව සිටින නිලධරයා ඉන් අදහස් වේ;

   (ඇ) මහ මැතිවරණයක අපේක්ෂකයෙකු වන යම් ඉල්ලුම්කරුවකු සම්බන්ධයෙන් යෙදෙන විට, ඉල්ලුම්කරු ඡන්දහිමියකු වශයෙන් ලියාපදිංචි කරනු ලැබූ මැතිවරණ කොට්ඨාසය සඳහා වූ තේරීම්භාර නිලධරයා ඉන් අදහස් වේ.

## උපදෙස්

1. අයදුම්කරු 1981 අංක 1 දරන පාර්ලිමේන්තු මැතිවරණ පනතේ 26(2) උප වගන්තිය යටතේ තැපැල් ඡන්දදායකයකු ලෙස සළකනු ලැබීමට සුදුස්සකු විය යුතුය.

2 අයදුම්කරුගේ නම, අදාළ ඡන්දහිමි නාමලේඛනයේ සඳහන් ආකාරයට, අයදුම්පතෙහි නියමිත ස්ථානයේ සඳහන් කිරීම අවශ්‍ය වේ.

3. අයදුම්පතෙහි සඳහන් ලියාපදිංචි විස්තර, නාමලේඛනයේ අදාළ විස්තර සමග නොගැලපුනහොත් අයදුම්පත ප්‍රතික්ෂේප වේ.

4. නියමිත සහතික කිරීමේ නිලධාරීගේ අත්සන, නිල මුද්‍රාව අයදුම්පතේ ඇතුළත් නොවීම සහ අයදුම්පත්,භාරගන්නා අවසන් දින හෝ එදිනට පෙර අයදුම්පත දිස්ත්‍රික් තේරීම්භාර නිලධාරී වෙත නොලැබීම, එය ප්‍රතික්ෂේප වීමට හේතු වේ.

5. අවශ්‍ය විස්තර ඇතුළත් කොට අයදුම්පත සම්පූර්ණ කිරීම අයදුම්කරු විසින්ම සිදුකිරීමට වග බලාගත යුතුය.

6. අයදුම්කරුවකු විසින් නාමලේඛනයේ තමාගේ ලියාපදිංචි විස්තර, අදාළ ඡන්දහිමි නාමලේඛනයෙන් උපුටා ගැනීමට පෙර, අදාළ නම ඇතුළත් ගෘහය තම පවුලේ සාමාජිකයන් ඡන්දහිමියන් වශයෙන් ලියාපදිංචි ගෘහය බවට සැහීමකට පත්විය යුතුය. එසේ නොවුනහොත් තමාගේ නමට සමාන, ඡන්දහිමි නාමලේඛනයේ ලියාපදිංචි වෙනත් නමකට අදාළ විස්තර අයදුම්කරු විසින් සිය අයදුම්පතෙහි ඇතුළත් කිරීමට ඉඩ ඇත. එවැනි විස්තර ඇතුළත් අයදුම්පතක් තේරීම්භාර නිලධාරියකු විසින් පිළිගතහොත්, අයදුම්කරු විසින් තමාගේ නමට සමාන වෙනත් නමකට අදාළ පුද්ගලයකු වෙනුවෙන් තැපැල් ඡන්ද පහසුකම් ඉල්ලීම නිසා, වෙනත් අයකුගේ ඡන්දය දීමේ අවස්ථාව අහිමි වී යනු ඇත. එසේ වුවහොත් වැරදි ලෙස තැපැල් ඡන්ද ඉල්ලුම් කරන තැනැත්තන් දඬුවම් ලැබිය හැකි වරදක් කරනු ලැබුවාසේ සැලකෙනු ඇත.

කාර්යාලයීය කේත අංකය | | | [shaded] | | | | | [shaded] | | | |

**පී.ඊ. 2/එස්.**

1981 අංක 1 දරන පාර්ලිමේන්තු මැතිවරණ පනත

**තැපැල් ඡන්දදායකයකු වශයෙන් සලකනු ලැබීම සඳහා ඉල්ලුම් කිරීම**

(ආකෘතිය සම්පූර්ණ කිරීමට පෙර පසුපිට සටහන සහ උපදෙස් බලන්න.)

"අ" ආකෘතිය

අංක..............දරන................................ මැතිවරණ කොට්ඨාසයේ තේරීම් භාර නිලධරයා වෙත,

............................................................................................ (වන) | | | | | | | | | | | | |

(නම)

දරන ජාතික හැඳුනුම්පත හිමි මම, පූර්වෝක්ත මැතිවරණ කොට්ඨාසයේ ඡන්ද හිමි නාමලේඛනයෙහි ..................................... ............................................................................................................................................ යනුවෙන් මගේ

නම දැක්වෙන බව මෙයින් ප්‍රකාශ කරමි.

**දැනට වලංගු ඡන්ද හිමි නාමලේඛනයේ මගේ නම ලියාපදිංචියට අදාළ විස්තර පහත දැක්වේ :**

| | | | |
|---|---|---|---|
| පරිපාලන දිස්ත්‍රික්කය: | | ග්‍රාම නිලධාරී කොට්ඨාසය: | |
| ඡන්ද ප්‍රදේශයේ අක්ෂරය හා නම: | | වීදියේ / ගමේ නම: | |
| ඡන්ද කොට්ඨාසයේ අංකය: | | මගේ නමට අයත් අනුක්‍රමික අංකය: | |
| ගෘහ මූලිකයාගේ නම: | | | |

* (1) *(අ) ශ්‍රී ලංකා යුද හමුදාවේ* / ශ්‍රී ලංකා නාවික හමුදාවේ* / ශ්‍රී ලංකා ගුවන් හමුදාවේ සාමාජිකයකු වශයෙන්;

*(ආ) පොලිස් දෙපාර්තමේන්තුවේ* / බන්ධනාගාර දෙපාර්තමේන්තුවේ* / ශ්‍රී ලංකා ආණ්ඩුවේ දුම්රිය දෙපාර්තමේන්තුවේ* / තැපැල් දෙපාර්තමේන්තුවේ සහ විදුලි සංදේශ දෙපාර්තමේන්තුවේ* / ශ්‍රී ලංකා මධ්‍යම ගමනාගමන මණ්ඩලයේ* / ............................................................................................. ප්‍රාදේශීය ගමනා ගමන මණ්ඩලයේ නිලධරයකු හෝ සේවකයකු වශයෙන්;

*(ඇ) තෝරා පත්කර ගැනීම හා සම්බන්ධිත කාර්ය සඳහා පත්කරනු ලැබූ* / පත්කරනු ලැබීමට ඉඩ ඇති රජයේ සේවයේ නිලධරයකු හෝ සේවකයකු වශයෙන්;

*(ඈ) ඒ තෝරා පත්කර ගැනීම හා සම්බන්ධිත කාර්ය සඳහා පත්කරනු ලැබූ* / පත්කරනු ලැබීමට ඉඩ ඇති ශ්‍රී ලංකා මහ බැංකුවේ නිලධරයකු හෝ සේවකයකු වශයෙන්;
මගේ සේවා නියුක්තියේ විශේෂ අවස්ථානුගත කරුණුවල හේතුවෙන්;

*(2) අංක ........................... දරන.......................................................මැතිවරණ කොට්ඨාසය සඳහා මා අපේක්ෂකයකු වීම හේතුවෙන්,

මට වෙන්කරන ලද ඡන්ද පොළට පෞද්ගලිකව ගොස් මට ඡන්දය දීමට නොහැකි* / නොහැකි වීමට ඉඩ ඇති බැවින්, ඉහත සඳහන් මැතිවරණ කොට්ඨාසය සඳහා මන්ත්‍රීවරයන් තෝරාපත්කර ගැනීමේ දී තැපැල් ඡන්දදායකයකු වශයෙන් සළකනු ලැබීමට මම මෙයින් ඉල්ලුම් කරමි.

මගේ ඡන්ද පත්‍රිකාව සහ අනිකුත් ලේඛන එවනු ලැබිය යුතු ලිපිනය පහත දැක්වේ :

පසු පිටේ දැක්වෙන සටහන ප්‍රකාර සහතික කිරීමේ නිලධරයකු වශයෙන් ක්‍රියා කිරීමට ඉල්ලුම්කරුට හිමිකමක් නොමැති නම්, ඉල්ලුම්කරුගේ සහතික කරන නිලධරයාගේ නිල නාමය සහ ලිපිනය සඳහන් කරන්න. } ..............................................................
..............................................................
..............................................................

සහතික කිරීමේ නිලධරයකු වශයෙන් ක්‍රියාකිරීමට ඉල්ලුම්කරුට හිමිකම තිබේ නම්, ඉල්ලුම්කරුගේ නිල නාමය සහ ලිපිනය සඳහන් කරන්න. } ..............................................................
..............................................................

.............................................
ඉල්ලුම්කරුගේ අත්සන.

දුරකථන අංකය: රාජකාරි: .................................................. තනතුර: ..............................................................................
පෞද්ගලික:.................................................. රාජකාරි ලිපිනය: ...................................................................

දිනය: ...................................

ඉල්ලුම්කරු, සහතික කිරීමේ නිලධරයාගේ කාර්යාලයේම/ ආයතනයේම/විදුහලේම සේවය නොකරන්නේ නම් ඉල්ලුම්කරුගේ අනන්‍යතාව සම්බන්ධයෙන් සහතික කිරීමේ නිලධරයා සෑහීමකට පත්වීම සඳහා පසුපිටේ දැක්වෙන සහතිකය, ඉල්ලුම්කරුගේ කාර්යාලයේ / ආයතනයේ / විදුහලේ ප්‍රධානියා විසින් සම්පූර්ණ කිරීම අත්‍යවශ්‍යය. (උදාහරණ :- කලාප අධ්‍යාපන අධ්‍යක්ෂ සහතික කිරීමේ නිලධාරියා වන අවස්ථාවක ගුරුවරුන් සම්බන්ධයෙන් එම ගුරුවරුන් සේවය කරන විදුහලේ විදුහල්පති විසින් පසුපිටේ සඳහන් සහතිකය සම්පූර්ණ කළ යුතුයි.)

1. ඉල්ලුම්කරු තැපැලෙන් ඡන්දය දීම සඳහා හිමිකම් ඇති අයකු බවට නිසැකවීමි.
2. මා* / ඉල්ලුම්කරු විසින් මෙම ඉල්ලුම් පත්‍රයෙහි සඳහන් කරන ලද කරුණු හේතුකොටගෙන මට*/ඔහුට වෙන්කරන ලද ඡන්ද පොළට පෞද්ගලිකව ගොස් මට*/ඔහුට ඡන්දය දීමට නොහැකි*/නොහැකි වීමට ඉඩ ඇති බව මම මෙයින් සහතික කරමි.
3. මේ ඉල්ලුම් පත්‍රයේ දැක්වෙන මගේ නිල නාමය සහ ලිපිනය නිවැරදිය.
(ඉල්ලුම්කරුගේ අනන්‍යතාව, ජාතික හැඳුනුම්පත හෝ වෙනත් හැඳුනුම්පතක් මගින් තහවුරු කර ගැනීමෙන් අනතුරුව හෝ පසුපිටේ සඳහන් කාර්යාලයේ/ආයතනයේ/විදුහලේ ප්‍රධානියාගේ සහතිකය හරහා අනන්‍යතාව පිළිබඳව සෑහීමකට පත්වීමෙන් අනතුරුව ඉල්ලුම්කරුගේ සහතික කිරීමේ නිලධාරියා විසින් අයදුම්පත්‍රය සහතික කිරීමට වග බලා ගත යුතුය).

..............................................................
සහතික කරන නිලධාරියාගේ*/ඉල්ලුම්කරුගේ අත්සන.

දිනය: ................................ නම : ..............................................................................
නිල මුද්‍රාව: නිල නාමය : ....................................................................
දුරකථන අංකය: ................................................ ජාතික හැඳුනුම්පත් අංකය : | | | | | | | | | | | | |

*(අදාළ නොවන වචන කපා හරින්න.)

සහතික කරන නිලධාරියාගේ කේතය | | | [shaded] | | | | | [shaded] | | | [shaded] | |

මෙම ආකෘතිය සිංහල, දෙමළ, ඉංග්‍රීසි භාෂාවලින්ම ලබාගත හැකිය. ඔබේ අවශ්‍යතාව සඳහා මැතිවරණ කාර්යාලය විමසිය හැකිය.
இப்படிவத்தை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பெற்றுக் கொள்ள முடியும். உங்கள் தேவைப்பாடு தொடர்பாகத் தேர்தல்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.
This form is available in Sinhala, Tamil and English Languages. You may contact the Elections Office for your requirement.

සහතික කිරීමේ නිලධාරි,

තැපෑලෙන් ඡන්දය දීම සඳහා පසුපිටේ දැක්වෙන තොරතුරු සපයා ඇති...............................................................................

.................................... මයා/මිය/මෙනවිය ජාතික හැඳුනුම්පත් අංක | | | | | | | | | | | | |

අයදුම්කරු මගේ කාර්යාලයේ/ආයතනයේ/ශාඛාවේ/විද්‍යාලයේ සේවය කරන බව සහතික කරමි.

..........................................
අත්සන
ඉල්ලුම්කරු සේවය කරන කාර්යාලයේ/ආයතනයේ/
ශාඛාවේ/විද්‍යාලයේ ප්‍රධානියා

රාජකාරී ලිපිනය : ........................................ නම : .....................................................................

දුරකථන අංකය : රාජකාරී : .............................. තනතුර : .....................................................................

පෞද්ගලික :...........................

## සටහන

1. සෑම ඉල්ලුම් පත්‍රයක් ම, මැතිවරණයක් පවත්වන ලෙස නියම කරමින් කරන ලද ප්‍රකාශනය හෝ ආඥාව පළ කරනු ලැබූ දිනයේ සිට දින හතකට කලින් නොවන හා දින දහ හතරකට පසුව නොවන දිනයක, ඉල්ලුම්කරු ඡන්දහිමියකු වශයෙන් ලියාපදිංචි වී සිටින මැතිවරණ කොට්ඨාසයේ තේරීම්භාර නිලධරයා වෙත ඉදිරිපත් කරනු ලැබිය යුතුය.

2. සෑම ඉල්ලුම් පත්‍රයක්ම නිසි පරිදි පුරවා තිබිය යුතුය. එසේ නොවුවහොත් තේරීම්භාර නිලධරයා විසින් එය ප්‍රතික්ෂේප කරනු ලැබීමට යටත් වන්නේය.

3. සෑම ඉල්ලුම්කරුවකුටම තේරීම්භාර නිලධරයාගේ තීරණය දන්වනු ලැබේ.

4. ඉල්ලුම් පත්‍රය අනුමත කරනු ලැබූ යම් ඉල්ලුම්කරුවකු සහතික කිරීමේ නිලධරයකු වශයෙන් කටයුතු කිරීමට හිමිකම ලබා ඇත්නම්, ඔහුගේ ඉල්ලුම් පත්‍රයෙහි දක්වා ඇති ඔහුගේ නමට සහ ලිපිනයට හෝ, ඔහු එසේ හිමිකම් ලබා නොමැතිනම්, ඔහුගේ ඉල්ලුම් පත්‍රයෙහි නිල නාමය සහ ලිපිනය දක්වා ඇති සහතික කිරීමේ නිලධරයාගේ භාරය යටතේ හෝ ඡන්ද පත්‍රිකාව සහ අනෙකුත් ලේඛන යවනු ලැබේ.

5. "සහතික කිරීමේ නිලධරයා" යන යෙදුම -

   (අ) ශ්‍රී ලංකා යුද්ධ හමුදාවේ හෝ ශ්‍රී ලංකා නාවික හමුදාවේ හෝ ශ්‍රී ලංකා ගුවන් හමුදාවේ සාමාජිකයකු වන යම් ඉල්ලුම්කරුවකු සම්බන්ධයෙන් යෙදෙන විට –

      (i) ඒ ඉල්ලුම්කරු ඒ යුද්ධ හමුදාවේ හමුදාධිපති හෝ ඒ නාවික හමුදාවේ හමුදාධිපති හෝ ඒ ගුවන් හමුදාවේ හමුදාධිපති නම්, නැතහොත් ඒ ඉල්ලුම්කරු, තමා සේවය කරන ඒකකයේ හෝ ආයතනයේ ඊළඟට සිටින කාර්යභාර නිලධරයා වන්නේ නම්, ඒ ඉල්ලුම්කරු ඉන් අදහස් වේ; නැතහොත්

      (ii) ඒ ඉල්ලුම්කරු මේ අනුඡේදයේ (i) වන කොටසෙහි සඳහන් තැනැත්තකු නොවන්නේ නම්, ඉල්ලුම්කරු සේවය කරන ඒකකයේ හෝ ආයතනයේ ඊළඟට සිටින කාර්ය භාර නිලධරයා ඉන් අදහස් වේ;

   (ආ) රජයේ සේවයේ හෝ ශ්‍රී ලංකා මහ බැංකුවේ නිලධරයකු හෝ සේවකයකු වන යම් ඉල්ලුම්කරුවකු සම්බන්ධයෙන් යෙදෙන විට -

      (i) ඒ ඉල්ලුම්කරු, යම් කාර්යාලයක් භාරව සිටින නිලධරයා වන්නේ නම්, ඒ ඉල්ලුම්කරු ඉන් අදහස් වේ; නැතහොත්

      (ii) ඒ ඉල්ලුම්කරු මේ අනුඡේදයේ (i) වන කොටසෙහි සඳහන් තැනැත්තකු නොවන්නේ නම්, ඉල්ලුම්කරු සේවය කරන කාර්යාලය භාරව සිටින නිලධරයා ඉන් අදහස් වේ;

   (ඇ) මහ මැතිවරණයක අපේක්ෂකයෙකු වන යම් ඉල්ලුම්කරුවකු සම්බන්ධයෙන් යෙදෙන විට, ඉල්ලුම්කරු ඡන්දහිමියකු වශයෙන් ලියාපදිංචි කරනු ලැබූ මැතිවරණ කොට්ඨාසය සඳහා වූ තේරීම්භාර නිලධරයා ඉන් අදහස් වේ.

## උපදෙස්

1. අයදුම්කරු 1981 අංක 1 දරන පාර්ලිමේන්තු මැතිවරණ පනතේ 26(2) උප වගන්තිය යටතේ තැපැල් ඡන්දදායකයකු ලෙස සළකනු ලැබීමට සුදුස්සකු විය යුතුය.

2 අයදුම්කරුගේ නම, අදාළ ඡන්දහිමි නාමලේඛනයේ සඳහන් ආකාරයට, අයදුම්පතෙහි නියමිත ස්ථානයේ සඳහන් කිරීම අවශ්‍ය වේ.

3. අයදුම්පතෙහි සඳහන් ලියාපදිංචි විස්තර, නාමලේඛනයේ අදාළ විස්තර සමග නොගැලපුනහොත් අයදුම්පත ප්‍රතික්ෂේප වේ.

4. නියමිත සහතික කිරීමේ නිලධාරිගේ අත්සන, නිල මුද්‍රාව අයදුම්පතේ ඇතුළත් නොවීම සහ අයදුම්පත් භාරගන්නා අවසන් දින හෝ එදිනට පෙර අයදුම්පත දිස්ත්‍රික් තේරීම්භාර නිලධාරි වෙත නොලැබීම, එය ප්‍රතික්ෂේප වීමට හේතු වේ.

5. අවශ්‍ය විස්තර ඇතුළත් කොට අයදුම්පත සම්පූර්ණ කිරීම අයදුම්කරු විසින්ම සිදුකිරීමට වග බලාගත යුතුය.

6. අයදුම්කරුවකු විසින් නාමලේඛනයේ තමාගේ ලියාපදිංචි විස්තර, අදාළ ඡන්දහිමි නාමලේඛනයෙන් උපුටා ගැනීමට පෙර, අදාළ නම ඇතුළත් ගෘහය තම පවුලේ සාමාජිකයන් ඡන්දහිමියන් වශයෙන් ලියාපදිංචි ගෘහය බවට සෑහීමකට පත්විය යුතුය. එසේ නොවුනහොත් තමාගේ නමට සමාන, ඡන්දහිමි නාමලේඛනයේ ලියාපදිංචි වෙනත් නමකට අදාළ විස්තර අයදුම්කරු විසින් සිය අයදුම්පතෙහි ඇතුළත් කිරීමට ඉඩ ඇත. එවැනි විස්තර ඇතුළත් අයදුම්පතක් තේරීම්භාර නිලධාරියකු විසින් පිළිගතහොත්, අයදුම්කරු විසින් තමාගේ නමට සමාන වෙනත් නමකට අදාළ පුද්ගලයකු වෙනුවෙන් තැපැල් ඡන්ද පහසුකම් ඉල්ලීම නිසා, වෙනත් අයකුගේ ඡන්දය දීමේ අවස්ථාව අහිමි වී යනු ඇත. එසේ වුවහොත් වැරදි ලෙස තැපැල් ඡන්ද ඉල්ලුම් කරන තැනැත්තන් දඬුවම් ලැබිය හැකි වරදක් කරනු ලැබුවාසේ සැලකෙනු ඇත.

7. 1981 අංක 1 දරන පාර්ලිමේන්තු මැතිවරණ පනතේ 77 (1) වගන්තිය අනුව ජීවත්ව සිටින හෝ මියගොස් ඇති හෝ ව්‍යාජ වූ හෝ වෙනත් යම් තැනැත්තකු වශයෙන් තැපෑලෙන් ඡන්දය දීමට පහසුකම් ඉල්ලා සිටීම, 1979 අංක 15 දරන අපරාධ නඩු විධාන සංග්‍රහය යටතේ දඬුවම් කළ හැකි, හොර ඡන්දය දීමේ වරදක් වේ.

GCE240005 – 1,400,000 (2024/09) ශ්‍රී ලංකා රජයේ මුද්‍රණ දෙපාර්තමේන්තුව.